கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

கொள்ளுத்தண்ணிப்பட்டி - கரூர்

இணையவழிக் கற்பித்தல் - முதன்மைப் பாடம் - 1 (சிற்றிலக்

(இரண்டாம் பருவம் MAJOR I - 16 ACCTA3)

அலகுகள் - 5

அலகு - 1

உலா - குலோத்துங்க சோழன் உலா

அலகு - 2

குறவஞ்சி - குற்றாலக் குறவஞ்சி

அலகு - 3

பிள்ளைத்தமிழ் - முத்துக்குமாரசாமிப் பிள்ளை

அலகு - 4

பரணி - கலிங்கத்துப் பரணி (காடு பாடி

தேவி பாடியது)

அலகு - 5

தூது - அழகர் கிள்ளை விடுதூது.

Scanned with CamScanner

உலா – குலோத்துங்க சோழன் உலா

1, 'உலா' என்றால் என்ன?

அறிவு, செல்வம், ஆண்மை, அன்பு, ஈகை, எழில் போன்ற பண்புகளில் உயர்ந்த இறைவனோ, அரசனோ, தலைவனோ பாட்டுத்தலைவராவார். பாட்டுடைத் தலைவர் பிறந்தநாள், மணநாள், முடிசூட்டும் நாளில் தேர், குதிரை, யானை மீதேறி உலா வருவர். அவ்வுலாவைக் காண வரும் ஏழுபருவத்துப் பெண்களும் காதல் கொள்ளும் தன்மை ஆகும்.

2, மன்னர்கள் (அ) பாட்டுடைத் தலைவர்கள் 'உலா' வருதலின் நோக்கம் என்ன?

குலம், குடிப்பிறப்பு, பரம்பரை முதலியவற்றின் சிறப்பை உலகிற்கு உணர்த்தும் பொருட்டும் நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்பவும் ஒருநாளோ அல்லது ஏழுநாளோ உலா வருவர்.

3, உலாவிற்கு பன்னிருபாட்டியல் கூறும் இலக்கணம் யாது?

"பேதை முதலா எழுவகை மகளிர் கண்
ஓங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல் செய்தலின் வரும் கலிவெண்பாட்டே."

உலாவிற்கு ஏற்ற யாப்பு வகை என்ன?
கலிவெண்பா

5) எழுவகைப் பெண்டிரின் பெயரையும் வயதையும் கூறுக.

* பேதை 5-7
* பெதும்பை 8-11
* மங்கை 12-13
* மடந்தை 14-19
* அரிவை 20-25
* தெரிவை 26-32
* பேரிளம்பெண் - 33-40

6) 'தசாங்கம்' என்றால் என்ன?

உலாவில் பாடப்படும் பாட்டுடைத் தலைவனின் பத்து உறுப்புக்களை 'தசாங்கம்' எனப்படும். அவை யாவன/

மலை, ஆறு, நாடு, நகர், யானை, குதிரை, மாலை, முரசு, கொடி, ஆணை (அ) செங்கோல்.

7) முதன் முதலில் தோன்றிய 'உலா' நூல் எது? இயற்றியவர் யார்?

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமான் நாயனார் இயற்றிய திருக்கைலாய 'ஞானவுலா' ஆகும். இந்நூலே பிற்கால உலா நூல்களின் வழிகாட்டி ஆகும்.

8) 'உலா' பாடுவதில் சிறந்தவர் யார்?

உலா பாடுவதில் ஒட்டக்கூத்தனே உயர்வு பெற்றவர்.

9) 'உலா' இலக்கியங்களுள் புகழ்பெற்றது எது?

ஒட்டக்கூத்தர் இயற்றிய 'மூவருலா' ஆகும்.

Scanned with CamScanner

10) 'மூவருலா' - குறிப்பு வரைக.

உலா இலக்கியங்களுள் புகழ்பெற்று விளங்குவது 'மூவருலா' ஆகும். ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்றது இது மூன்று உலாக்களை உள்ளடக்கியது.

சோழ மன்னர்களுள் சிறந்து விளங்கிய மூவரான, இராஜராஜ சோழன், குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் மூவரைப் பற்றியதாகும்.

11) 'உலா' இலக்கியங்களின் பாடுபொருள் யாது?

சோழர் (மன்னர்) குலமரபு, பாட்டுடைத் தலைவன் பெருமை, வீரம், ஒப்பனை, பட்டத்து யானையின் பவனி, ஏழுநிலை மகளிர் உள்ளக்கிளர்ச்சி, அவர்தம்
2 விளையாட்டுக்கள் ஆகியவையே ஆகும்.

12) ஒட்டக்கூத்தர் - குறிப்பு வரைக.

இயற்பெயர் - கூத்தன்; ஊர் - 'மலரி'
ஒட்டம் என்றால் பந்தயம் என்பது பொருள்
இனம் - செங்குந்தன்
இவர் செங்குந்தர்களின் புகழ்பாடும் 'ஈட்டி எழுபது'
3 என்னும் நூலைப் பாடியபோது தலைவெட்டப்பட்டு உயிரிழந்த எழுபது செங்குந்தர்களின் தலைகள் உடலோடு ஒட்டிக் கொண்டு உயிரோடு எழுந்தனர். அதனால், ஒட்டக்கூத்தர் எனப்பெயர் பெற்றார் என்ப
4 சிறப்புப் பெயர்கள்: கவிராட்சசன், காளக்கவி, சக்கரவர்த்தி சருவக்ஞகவி

10) 'மூவருலா' - குறிப்பு வரைக.

உலா இலக்கியங்களுள் புகழ்பெற்று விளங்குவது 'மூவருலா' ஆகும். ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்றது இது மூன்று உலாக்களை உள்ளடக்கியது.

சோழ மன்னர்களுள் சிறந்து விளங்கிய மூவரான, இராஜராஜ சோழன், குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன் மூவரைப் பற்றியதாகும்.

11) 'உலா' இலக்கியங்களின் பாடுபொருள் யாது?

சோழர் (மன்னர்) குலமரபு, பாட்டுடைத் தலைவன் பெருமை, வீரம், ஒப்பனை, பட்டத்து யானையின் பவனி, ஏழ்நிலை மகளிர் உள்ளக்கிளர்ச்சி, அவர்தம்
2 விளையாட்டுக்கள் ஆகியவையே ஆகும்.

12) ஒட்டக்கூத்தர் - குறிப்பு வரைக.

இயற்பெயர் - கூத்தன் ; ஊர் - 'மலரி'

ஒட்டம் என்றால் பந்தயம் என்பது பொருள்

இனம் - செங்குந்தன்

இவர் செங்குந்தர்களின் புகழ்பாடும் 'ஈட்டி எழுபது'
3 என்னும் நூலைப் பாடியபோது தலை வெட்டப்பட்டு உயிரிழந்த எழுபது செங்குந்தர்களின் தலைகள் உடலோடு ஒட்டிக் கொண்டு உயிரோடு எழுந்தனர். அதனால், ஒட்டக்கூத்தர் எனப்பெயர் பெற்றார் என்பர்.

4 சிறப்புப் பெயர்கள் : கவிராட்சசன், காளக்கவி, சக்கரவர்த்தி சருவக்ஞகவி

13, ஒட்டக்கூத்தரின் சிறப்பு என்ன?

குலோத்துங்க மன்னனுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தவர் இவரே. மேலும், தவறாக பாடல் இயற்றும் புலவர்களைத் தண்டிக்கும் இயல்புடையவர்.

14, சோழர்களின் காலம் பொற்காலம் எனப் போற்றப்படுவதேன்?

சோழர்கள் இணையற்ற கலைத்திறனும் சமயப் பற்றும் வாய்க்கப்பெற்றவர்கள். தெய்வப்பணிக்காக பல கிராமங்களையே கோயில்களுக்குத் தானமாக வழங்கினர். தங்கள் மெய்க்கீர்த்திகளை எதிர்கால சந்ததிகளும் அறியும் வண்ணம் கல்வெட்டுகளில் பொறித்து வைத்தனர்.

எ.கா "தஞ்சைப் பெருவுடையார் கோயிலை" இராஜ ராஜ சோழனும் "கல்லணையை" கரிகாற் சோழனும் கட்டியதே மிகச் சிறந்த சான்றுகள் எனலாம்.

15, முதலாம் குலோத்துங்க சோழன் மக்களால் எவ்வாறு பாராட்டப்பட்டான்?

'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று பாராட்டப்பட்டான்.

16, குலோத்துங்க சோழனின் பெற்றோர்?

இராசராசன் - அங்கம்மா தேவி

(இராஜ ராஜ சோழனின் மகன் இராஜேந்திரனின் பெயரன் இராசராசன் மகன். கங்கை கொண்ட சோழனின் மகள் அம்மங்கை இவன் தாய்)

Scanned with CamScanner

17/ முதலாம் குலோத்துங்க சோழனின் சிறப்புப் பெயர்கள் என்ன ?

அபயன், கரிகாலன், ஜெயதரன், அநபாயன் "ஆனசீர் அநபாயன்", திரிபுவனச் சக்கரவர்த்தி, சுங்கம் தவிர்த்த சோழன், பொன்வேய்ந்த சோழன், திருநீற்றுச் சோழன் எனவும் அழைக்கப் பெற்றான்.

18/ குலோத்துங்கனின் பிறப்பின் போது ஏற்பட்ட நல்ல நிமித்தங்கள் (சகுனங்கள்) யாவை?

திருமால் போன்ற குலோத்துங்கன் பிறந்தவுடன் மண்ணும் விண்ணும் மகிழ்ந்தன. நான்கு வேதங்களும் வானுலகத் தேவர்களும் தங்களுக்கு வந்த துன்பம் எல்லாம் தொலைந்தன என்று மகிழ வானில் 'துந்துபி முழக்கம்' (ஒரு வகை மங்கல வாத்தியம்) எழுந்தது. பூமாரி போன்ற மழைத்துளிகள் விழுந்தன. இவற்றைக் கண்ட சோழமாதேவி அதாவது அங்கம்மா தேவியின் தாய் தேவேந்திரனைப் போல அரசர்களுக்கெல்லாம் அரசனாகத் திகழ்வான் என்று ஆசிர்வதித்தாள்.

19, ஐவகைப் படைக் கருவிகள் எவையெவை?
சக்கரம், சங்கு, வாள், வில், தண்டாயுதம்.

20, முதலாம் குலோத்துங்க சோழனின் முன்னோர் சிறப்புகள் பற்றி சுருக்கி வரைக.

* பேராற்றல் மிக்க கரிகாலன் வடக்கே இமயம்வரை சென்று, தன் போக்கைத் தடுத்த மலைமுகட்டைத் தலைகீழாகப் புரட்டி பின் வளைந்த சிகரத்தை நிமிர்த்தி தன் புலிச்சின்னத்தைப் பொறித்தவன்.

* பசுவின் கன்றைத் தவறுதலாகத் தன் தேரில் ஏற்றிக் கொன்ற மகன் வீதிவிடங்கனைத் தான் தன் தேர்க் காலில் இட்டுக் கொன்று பசுவின் துயர் தீர்த்த நீதிதவறா மனுநீதிச் சோழன் இவனின் முன்னோர்.

* ஒரு சிறிய புறாவின் உயிர் காக்கும் பொருட்டுத் தன் உடல் சதையை அறுத்துக் கொடுத்தும் அதன் எடைக்கு ஈடாகாது போக; உலகம் வியக்கத் தராசுத் தட்டிலே தானே ஏறி அமர்ந்த புகழுக்கு உரிய "சிபிச் சக்கரவர்த்தி."

* "எமதர்மனுக்கே" நீதிமுறை சொன்ன சோழன் கிள்ளி வளவன்.

* குடகு மலையைக் குடைந்து காவிரி ஆற்று நீரைச் சோழநாட்டிற்குக் கொண்டு வந்த "கவேரன்".

Scanned with CamScanner

அலகு-II திருக்குற்றாலக் குறவஞ்சி

(குறவஞ்சி:) -திரிகூடராசப்பக் கவிராயர்

1, குறவஞ்சி என்றால் என்ன?

தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றே குறவஞ்சி ஆகும்.

2, சிற்றிலக்கியங்களுள் நாடக இலக்கியம் எனப் புகழப்பெறும் இலக்கியம் எது?

நாடக இலக்கியம் எனப்புகழப்பெறுவது 'குற்றாலக்குறவஞ்சி' ஆகும்.

3, குற்றாலக் குறவஞ்சியின் இலக்கணம் யாது?

பாட்டுடைத்தலைவன் உலா வருவதைக் கண்டு மயங்கி அவன் மீது காதல் கொண்டு வாடித் தவிக்கும் தலைவியொருத்திக் குறவர் குலத்தைச் சேர்ந்த வஞ்சியொருத்தி தலைவியின் காதல் நோய் நீங்குமாறு குறிசொலுவதாக அமைவதே குற்றாலக் குறவஞ்சியின் இலக்கணம் ஆகும்.

4, குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?

திரிகூடராசப்பக் கவிராயர்.

5, குறத்தியைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?

'கட்டுவிச்சி', 'அகவன் மகள்'

6, குற்றாலக் குறவஞ்சியின் கதைத்தலைவி யார்? அவளின் சிறப்பு என்ன?

குற்றாலக் குறவஞ்சியின் கதைத் தலைவி 'வசந்தவல்லி' ஆவாள். காண்போரைக் கண்களால் வசப்படுத்தும் அழகிய கண்களும் பெண்ணுக்கும் பெண் மயங்கும் பேரழகும் உடையவள், மேலும், ஆடவர்களின் மனதில் காமவேளின் கலகச் செயலை மூட்டி விடுபவள். (காமவேள் - மன்மதன்).

7, குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவர் யார்? அவரின் துணைவி யார்?

'திருக்குற்றால நாதர்' (அல்லது) 'குற்றாலத்து ஈசர்' – 'குழல்வாய் மொழி' ஆவாள்.

8, குற்றாலக் குறவஞ்சியில் இடம் பெற்றுள்ள முக்கிய மாந்தர்கள் யாவர்?

* குறத்தி, * தலைவி * குறவன் * கட்டியங்காரன் * பாங்கி * குளுவன் * புலியன் * தோழி

9, இறைவனின் திருவுலாவில் உடனிருந்தோர் யாவர்?

திருக்குற்றால நாதர் உலா வருவதனால் குற்றால நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. அப்போது *மன்மதன், *நிலமகளைத் தன் மனைவியாக உடைய திருமால் * கட்டியக்காரன் போன்றோர் உடனிருந்தனர்.

10, உலாவில் இறைவனைத் தாங்கி வரும் வாகனம் எது?

'பார்கொண்ட விடை' என்று சிவபுராணங்களால் சொல்லப்படும் திருமால் எருது ஊர்தியாக இறைவனைத் தாங்கி வருகிறார்.

11, கட்டியக்காரனின் தோற்றச் சிறப்பு என்ன?

* மழைமேகம் போன்ற கருநிறமுடையவன்.
* நேர்மை மிக்க முப்புரிநூல் விளங்கும் மார்பினை உடையவன்.
* நெடிய கைப்பிரம்பைத் தன் கையிலே உடையவன்.

12, கட்டியக்காரனின் வேலை (செயல்) என்ன?

* இறைவன் திருவீதியில் உலா வருவதனால் 'ஊரவர் அவ்வுலாவைக் காண வருக' என்று வரவேற்றல்

* அவ்வுலாவிற்கு இடையூறு ஏற்படாத வகையில் 'வீதியிலே ஒதுங்கி நில்லுங்கள்' என்று முன்னரே எச்சரிக்கை கூறி வருவது ஆகும்.

13, 'வசந்தவல்லி' தன்னை எங்ஙனம் அலங்கரித்துக் கொண்டாள்.

* தேவலோக மோகினியைப் போல அழகிய ஆடைகளை அணிந்து கொண்டாள்.

* பொன்னாலாகிய ஆபரணங்கள் பலவற்றையும் சூட்டிக் கொண்டாள்.

* ஒளிவீசும் நெற்றியிலே திலகமிட்டுக் கொண்டாள்.

* 'சூடகம்' என்றழைக்கப்படும் வளையல்களைத் தன் கைகளிலே அணிந்திருந்தாள்.

* பாதச்சிலம்பையும் கால்களில் உடையவள்.

14, வசந்தவல்லி மயக்கமுறக் காரணம் என்ன?

வானவரான திருக்குற்றால நாதர் மீது கொண்ட காதலினால் ஏக்கமுற்று வாடித் தன்னுடல் சோர்ந்து தரையிலே வீழ்ந்தாள்

Scanned with CamScanner

15, குறத்தியின் தோற்றம் பற்றிக் கூறுக.

* எளிய, வெளுத்த ஆடை; வில்லினைப் போன்ற நெற்றியில் கஸ்தூரிப் பொட்டு இட்டிருந்தாள், கண்டோர் கண்களைக் கவரும் கண்களில் மைதீட்டியிருந்தாள். கைகளிலே மாத்திரைக்கோலைப் பிடித்திருந்தாள்; இடுப்பிலே மணிக்கூடை விளங்கியது; கூந்தலிலே வெட்சிப்பூ, மூக்கில் முத்துப் புல்லாக்கு; கால்களில் சிலம்பும் அணிந்து "அம்மே! அம்மே" என்று கூவிக் கொண்டே குறி கூற வந்தாள்.

Scanned with CamScanner